2009 ஜூலை 9] [கலைஞர் மு. கருணாநிதி]

இன்றைக்குச் சமூக நீதிப்பற்றிப் பேசுகிறோம். நம்முடைய கோ.க. மணி அவர்களுக்கு நினைவிருக்குமென்று கருதுகிறேன். டாக்டர் அய்யா ராமதாஸ் அவர்கள் திருமண விழா ஒன்றினிலே பேசிய பேச்சு, அவர்களுடைய கட்சிப் பத்திரிகையிலேயே வெளியிட்டு, அந்தப் பேச்சு துண்டறிக்கைகளாகவும் வெளியிடப்பட்டு-ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் வன்னியர்களுக்கு எதிரி என்பதைப்போல ஒரு பிரச்சாரம்-அவர்களுடைய மொழியிலே சொல்ல வேண்டுமேயானால் "பரப்புரை" செய்யப்பட்டிருக்கின்ற இந்த நிலையில், ஒன்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சமூக நீதி பேசுகிற நாம், சமூக நீதிக் காவலர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கு தமிழ்நாட்டிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தரப்பட்ட மரியாதை என்ன என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். "வி.பி. சிங் என்பவர் வருகிறார்", பாட்டாளி மக்கள் கட்சியின் இன்றைய தலைவர் மணி அவர்களுடைய தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் என்ன அறிக்கைவிட்டார் தெரியுமா? "வன்னியப் பெண்களே வீட்டின் கதவுகளையெல்லாம் மூடிக்கொண்டு, ஜன்னல்களையெல்லாம் மூடிக்கொண்டு, வெளியே தலைகாட்டாமல் இருங்கள். ஓர் ஆள்கூட வி.பி. சிங் முகத்திலே விழிக்கக் கூடாது" - யார்? சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களுக்கு நமது டாக்டர் அய்யா அவர்கள் கொடுத்த கௌரவம் இது.

ஆகவே, அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு சில செயல்களிலே ஈடுபடுகின்ற காரணத்தால்தான் இன்றைய விளைவுகளை அனுபவிக்க நேரிட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று தயவுசெய்து பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களை குறிப்பாக என்னுடைய அருமை நண்பர் மணி அவர்களை நான் கேட்டுக்கொண்டு இந்த விளக்கத்தை இதோடு நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

3. கவன ஈர்ப்பு

வால்பாறை, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்

திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கோவை தங்கம் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திலுள்ள அனைத்து தொழிலாளர் குடியிருப்புகளும் முந்தைய சின்கோனா துறையால் 40-50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டவை. அவை கட்டப்பட்டு நீண்ட காலமானதால், அக்குடியிருப்புகளில் பழுதுகள் ஏற்பட்டுள்ளன. எனினும், வால்பாறையிலுள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் பெரும்பாலும் செய்து தரப்பட்டுள்ளன. மேலும், 2008-2009 ஆம் நிதியாண்டில், வால்பாறையிலுள்ள தொழிலாளர் குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுகள் மேற்கொள்ள ரூ.5.05 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவிர, 2009-2010 ஆம் நிதியாண்டில் ரூ.39 இலட்சம், குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுகள் மேற்கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கழகக் குடியிருப்புகளுக்குச் செல்லும் நடைபாதைகளுக்கு சிமென்ட் பாதை (கான்கிரீட்) அமைத்துத் தருமாறும், சாலைகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும்படியும், தெரு விளக்குகள் அமைத்துத் தருமாறும், வால்பாறை பேரூராட்சியிடம் தொடர்ச்சியாகக் கோரப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை வசதிகள் குறித்து கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக கழகத் தொழிலாளர்கள் மத்தியில் பதட்டம் ஏதுமில்லை.

2009 ஜுலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்)

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம் நீங்கள் பேசுகிறீர்களா அல்லது கவன ஈர்ப்பு முடிந்ததாக அறிவிக்கவா?

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விவர அறிக்கையில் கூறியிருக்கின்றபடி மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே விவர அறிக்கையை அறிவித்திருக்கின்றார்கள். தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திலுள்ள அனைத்து தொழிலாளர் குடியிருப்புகளும் முந்தைய சின்கோனா துறையால் 40, 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகளாகும். (குறுக்கீடுகள்) கட்டப்பட்ட வீடுகளாகும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, நீங்கள் செய்வது முறையில்லை. (குறுக்கீடு) சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் சொன்னீர்கள், நீங்கள் சொன்ன கருத்துக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரையில் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். சொன்னதற்குப் பிறகும் மற்ற வேலைகளைத் தடை செய்வது மாதிரி உங்களுடைய நடவடிக்கை இருக்கிறது. இது முறையல்ல. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் சில விளக்கங்களைச் சொன்னதற்குப் பின்னர், அந்தப் பிரச்சினையைக் குறித்து விவாதிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் இந்தப் பிரச்சினையைப் பின்னால் எழுப்பலாம். உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் இன்னொரு நேரத்தில் எழுப்பலாமே தவிர, வேறு நேரத்திலே எழுப்பலாமே தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன், அதிலேயே பிரச்சினையை எழுப்புவது என்பது அவை மரபு அல்ல. அவையில் அனுமதிக்கப்படுவதில்லை.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2009 ஜூலை 9

முற்பகல் 11-00

இரண்டாவது, அவையினுடைய நேரத்தை நம்முடைய மனதில் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினைக்காக எப்போது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று தயவுசெய்து திரு. ஜி.கே. மணி அவர்கள் கருதக்கூடாது. அவை நேரம் என்பது, அனுமதி இல்லாமல் நீங்கள் எப்படி எழுந்து நிற்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதுங்கூட, மாண்புமிகு முதலமைச்சருக்கே நேரம் அனுமதிப்பது அவைத் தலைவர். தொடர்ந்து பேசுவதற்கோ, விவாதிப்பதற்கோ தலைவர் அனுமதித்தால் தவிர, எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்தப் பிரச்சினையை மறுபடியும் சந்தர்ப்பம் வரும்போது எழுப்புங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒரு உண்மையை திரு. ஜி.கே. மணி அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவரும் நீண்டகாலம் இங்கே இருக்கப் போகிறார். நாங்களும் நீண்டகாலம் இருக்கப் போகிறோம். இந்தப் பிரச்சினையும் நீண்ட காலம் இருக்கப் போகிறது. சமூக நீதி என்பது சமூகம் இருக்கும் வரை இருக்கும். (மேசையை தட்டும் ஒலி) ஆகவே அதை நீங்களும் தொடர்ந்து வாதாடலாம், நாங்களும் தொடர்ந்து பதில் அளிப்போம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், வனத் துறை அமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு பல முறை . . . (குறுக்கீடுகள்) வால்பாறைக்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வந்திருக்கின்றார்கள். சின்கோனா பகுதியில் இருக்கின்ற... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, நான் அனுமதி தரவில்லை. சபையினுடைய நடவடிக்கைக்கு இடையூறு பண்ணாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதி தரவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Sorry. sorry. பின்னர் பார்க்கலாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களாக வால்பாறையில் வரலாறு காணாத அளவிற்கு மழை தொடர்ந்து பெய்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், அமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு

2009 ஜூலை 9] [திரு. கோவை தங்கம்]

பல முறை வால்பாறைக்கு வந்திருக்கின்றார்கள். வால்பாறையினுடைய தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தினுடைய தொழிலாளர்களுடைய கஷ்டங்களையெல்லாம் நேரடியாகப் பார்த்து, கேட்டிருக்கிறார்கள். தற்போது அந்தத் தேயிலைத் தோட்ட TANTEA தொழிலாளர்கள் 72 ரூபாய் கூலிதான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இன்று தமிழக வரலாற்றிலேயே ரூ.72/-க்கு பதிலாக ரூ.120/- ஆக கூலி உயர்த்தி வழங்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினையும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், நீங்கள் கொடுத்த அறிக்கையின்மீது இரண்டு அல்லது மூன்று கேள்விகளை மட்டும் கேளுங்கள். Supplementary question மட்டும் கேட்கலாம். சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, அங்கே TANTEA தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் சுமார் 40, 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகள் ஆகும். அதுவும் வில்லை வீடுகள். அதாவது ஓட்டு வீடுகள். மழை வந்தால் ஒழுகக்கூடிய வீடுகள். நீராறு அணை அருகில்தான் அந்த வீடுகள் உள்ளன. அது தொடர்ந்து எப்போதும் மழை பெய்கின்ற இடமாகும். அங்கே வந்து மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கின்றார்கள். அங்கே 1½ அடி அளவிற்குப் பள்ளங்கள் உள்ளன. அந்தப் பகுதிகளில் சாக்கடை கிடையாது. அந்த வீட்டினை யானைகள் ஒரு முட்டு முட்டினால் அனைத்து வீடுகளும் வரிசையாக விழுந்துவிடும். அப்படிப்பட்ட பகுதியில் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முழுக் கவனம் எடுத்துக்கொண்டு, மேலும் பழுதடைந்த வீடுகளைக் கட்டித்தருவதற்கும், பழுது பார்த்துத் தருவதற்கும் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்வதோடு, மேலும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியில் பெரிய கல்லாறு, சிறிய கல்லாறு, சின்கோனா பகுதிகளில் 1½ அடி பள்ளங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் எந்தப் பேருந்தும் செல்ல முடியாது. அவ்வளவு மோசமாக இருப்பதை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களே பார்த்திருக்கின்றார்கள். ஆகவே, மீண்டும் அங்கே

[திரு. கோவை தங்கம்] [2009 ஜூலை 9

சாலைகளைப் போட்டுக் கொடுப்பதற்கும், வீடுகளைப் பழுது பார்ப்பதற்கும்...(குறுக்கீடுகள்)

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றவர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவையெல்லாம் 50 ஆண்டுகளுக்கு முன்பு சின்கோனா துறையாலே கட்டப்பட்டு, வனத் துறைக்கு 1-4-1990-லே மாற்றப்பட்டன. மாற்றப்பட்டதற்குப் பிறகு, படிப்படியாக தேவைப்படுகின்ற நேரத்தில், அவற்றில் பழுதுபார்ப்புப் பணிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன; மராமத்துப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு ரூ.13,85,000 ஒதுக்கப்பட்டு, ரூ.5,05,000 செலவாகியிருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் அதற்காக 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேயிலை விலை கடந்த மூன்று ஆண்டு காலமாக மிகக் குறைவாக இருந்த காரணத்தால், நிதிநிலை இல்லாத சூழ்நிலையில், அந்த அளவிற்குக் குறைவாக பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு தேயிலை விலை நன்றாக இருந்து, கழகத்தினுடைய நிதிநிலை நன்றாக இருக்கிறது. எனவே, அது செப்பனிட்டுத் தரப்படும் என்பதோடு, உள்ளாட்சித் துறையின் சார்பாகவும் அந்த நகராட்சியின் சார்பாகவும் அந்தச் சாலைகள் எல்லாம், ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு சிமெண்ட் சாலைகளாகப் போட்டுத் தரப்பட்டிருக்கின்றன. அதைப்போல, 21 விளக்குகளும் அமைத்துத் தந்திருக்கிறார்கள். எனவே, மீதமுள்ள பணிகள் குறித்த விவரங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவற்றை நிறைவேற்றித் தருவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தொடர்ந்து 10 நாட்களாகப் பெய்து வரும் பெரிய மழை காரணமாக அந்தப் பகுதியில் மீண்டும் வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இங்கே

இருக்கின்றார்கள். அதிலே கவனம் செலுத்தி, ஒன்றரை அடி பள்ளங்களாக இருக்கின்ற அந்தப் பகுதியில், பேருந்துகள் செல்ல முடியாமல், பள்ளிக் குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் செல்ல முடியாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே கவனம் செலுத்தி உடனடியாக உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஐந்தாவது முதல் நூற்று இருபத்து ஏழாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(ஆ) கோரிக்கை எண் 47–இந்து சமய மற்றும் அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை

- - - - -

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009-2010 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை